# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2335/31 - 2023 ජූනි මස 10 වැනි සෙනසුරාදා - 2023.06.10

*2335/31 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 7/ 2001*(IV)

**1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்**

*2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியின் கீழான கட்டளை*

*2012 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதிய 1758/ 19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி கபடாகே பொன் ஹரிச்சந்ர கமல் குணரத்ன ஆகிய நான், சொல்லப்பட்ட ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் படி செயற்பட்டு, இக்கட்டளையின் மூலம் மேலேயுள்ள ஒழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழும் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 2023 ஆம் ஆண்டு யூன் 08 ஆந் திகதிய 2335/ 16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பட்டியலுக்கான திருத்தத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்ட, 2014 ஆம் ஆண்டு மாச்சு 21 ஆந் திகதிய 1854/ 41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட மற்றும் பட்டியலிடப்பட்ட எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆளுக்கு குழுவினருக்கு அல்லது உருவகத்துக்குரிய அல்லது சொந்தமான அல்லது வைத்திருக்கப்பட்ட எல்லா நிதிகளையும், ஏனைய நிதிசார் சொத்துக்களையும், பொருளாதார மூலவளங்களையும் முடக்குகின்றேன்.*

*2014 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதிய 1863/ 25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி 5 இன் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையானது, அதன் கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் மீளப் பெறப்படுகின்றது.*

ஜெனரல் கமல் குணரத்ன, (ஓய்வுபெற்ற)
டப்டப்வீ ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ யூஎஸ்பீ என்டீசீ பீஎஸ்சீ எம்பில்,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு,
தகுதிவாய்ந்த அதிகாரி.

கொழும்பு,
*2023, யூன் 10.*

EOG *07-0128*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*